**Starting time 11.35 A.M.**

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No.165/2008**

Deposition of **C.W.-1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Sathya, Gr. III Bench Clerk of this court, on 29.10.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சேதுபதி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 165-ன் கீழ் இந்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் தாவா சொத்தான வீரகனூர் கிராம் வார்டு எண் 3 நடுவீதியில் நத்தம் சர்வே எண் 337/1 பி-ல் 5600 சதுரடி இடம் இவ்வழக்கு சொத்தாகும். அந்த சொத்தை நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் அளந்து வடபுறம் மற்றும் கிழபுற எல்லை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில், நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் ஆய்வு பணி செய்கின்றபோது நில அளவையர் கற்கள் இல்லாத காரணத்தினால் எதிர் தரப்பினர் சொத்துக்களை அளக்க ஆட்சேபனை தெரிவித்ததால் தன்னால் ஆய்வு பணியை முடிக்க இயலவில்லை என்று நீதிமன்ற ஆணையர் குறிப்பாணை தாக்கல் செய்துள்ள நிலையில் இதுபோன்ற சூழ்நிலையில் வருவாய் துறை சட்டங்களுக்குட்பட்டு சொத்தை எவ்வாறு அளக்க வேண்டும் என்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சில விளக்கம் அளிக்கவேண்டி தலைவாசல் வட்ட சார் ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், சாட்சி நேரில் ஆஜராகிய போது நீதிமன்றம் முன் வைத்த கேள்விகள்.

1) இவ்வழக்கு சூழ்நிலையை போன்று நில அளவை கற்கள் இல்லாத நிலையில் தாவா சொத்தை எவ்வாறு அளந்து எல்லை நிர்ணயம் செய்ய முடியும் என்றால், தாவா சொத்திற்கு மூன்று புறம் வேறு எங்காவது எல்லை கற்கள் இருந்தால் அதிலிருந்து அளந்துவந்து எல்லை நிர்ணயம் செய்வோம்.

2) அதுபோல் தாவா சொத்திற்கு அருகில் எங்குமே எல்லை கற்கள் இல்லாமல் வீடுகள் கட்டப்பட்டிருந்தால், தாவா சொத்தை எவ்வாறு அளந்து எல்லை நிர்ணயம் செய்ய முடியும் என்றால், அருகில் உள்ள பட்டா இடத்தை வருவாய் துறை ஆவணங்களுடன் ஒப்பிட்டு அளந்துவந்து அதன் பின் தாவா சொத்தை அளந்து எல்லை நிர்ணயம் செய்வோம்.

3) மேற்படி இரண்டு சூழ்நிலைகளிலும் தாவா சொத்தை அடைந்து எல்லை நிர்ணயம் செய்யும்போது துல்லியமாக எல்லை நிர்ணயம் செய்ய முடியுமா என்றால், செய்ய முடியும்.

சாட்சியின் மூலம் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது

**நீ.ம.சா.ஆ.**1 புதிய புல எண் 646-ன் புல வரைபடம் உண்மை நகல்
**நீ.ம.சா.ஆ.**2 நத்தம் சிட்டா உண்மை நகல்
**நீ.ம.சா.ஆ.**3 நத்தம் அடங்கல் உண்மை நகல்

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கேட்கப்படும் விளக்கம்:** அதுபோல் எல்லை கற்கள் இல்லாத நிலையில் அருகில் உள்ள வீட்டில் உள்ளவர்கள் சரியான அளவுடன்தான் அனுபவம் செய்து வருகிறார்களா என்று எதன் அடிப்படையில் தெரிந்துகொள்வோம் என்றால், சரியான அளவை ஒரு வீட்டை மட்டும் வைத்து உறுதி செய்ய முடியாது, நான்கு அல்லது ஐந்து வீடுகளை அளந்த பிறகு உறுதி செய்ய முடியும். நத்தம் குடியிருப்புகளில் குடியிருப்பவர்கள் ஒரு அடி, அரை அடி கூடுதலாக அனுபவத்தில் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால், சரிதான். அதுபோன்ற சமயத்தில் துல்லியமான

அளவை கண்டறிய இயலாது என்றால், மிகவும் துல்லியமாக காண இயலாது ஆனால், மிகவும் குறைந்தபட்ச வித்தியாசத்துடன் அளவு காணலாம். இதுபோன்ற சூழ்நிலையில் தோராயமாக அளக்கலாம் என்று வருவாய் துறையில் விதிகள் உள்ளதா என்றால், இல்லை.

Ending time : 11.54 A.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**